NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 8 March 2024

# என்யுஎஸ் மாணவர்கள் மேடைக்கலை கல்வியை முக்கியப் பாடங்களாக பயிலலாம்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் (என்யுஎஸ்) இளநிலைப் பட்டக் கல்வி மாணவர்கள் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் முதல் மேடைக்கலைப் பாடத்தை இரண்டாவது முக்கியப் பாடமாகவோ (செக்கண்ட் மேஜர்) சாதாரணப் பாடமாகவோ (மைனர்) பயிலலாம்.

மாணவர்களின் கற்றலில் கலைகளைச் சேர்க்கும் புதிய முயற்சியை தேசிய பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது. அதன்கீழ் இந்த மாற்றம் இடம் பெறுகிறது.

இம்முயற்சியின் மூலம் கலைக் கல்வி கூடுதல் மாணவர்களைச் சென்றடைவதோடு அவர்கள் கலைகளில் தங்களுக்கு இருக்கும் ஆர்வத்தைத் தக்கவைத்துக் கொள்ள உதவும் என்று நம்பிக்கை கொண்டுள்ளதாக தேசிய பல்கலைக்கழகத்தின் காற்று இசைக் கருவிக் குழுவில் இடம்பெறும் 21 வயது ஷர்மிளா செல்வம் கூறினார்.



என்யுஎஸ் காற்று இசைக் கருவிக் குழுவில் இடம்பெற்றுள்ள மாணவர் ஷர்மிளா செல்வம் (இடமிருந்து இரண்டாவது).
**படம்: என்யுஎஸ்**

“ஊக்குவிப்பு இல்லாததால் கலைகளில் ஆர்வம் இழந்த பலரை நான் பார்த்திருக்கிறேன்,” என்றார் இரண்டாம் ஆண்டு பொறியியல் பட்டக் கல்வி மாணவரான குமாரி ஷர்மிளா.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.